O.S.197/2022 நாள் 10.10.2025

பி.வா.சா.2 ராமசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

5 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதியிடம் இருந்து வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரயம் பெற்றிருக்கிறார் என்றால் சரிதான். அந்த பகுதியை அவர்தான் அனுபவம் செய்து வருகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் குடியிருப்பது தென்காசி என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் வாதியின் குடும்பமும் இருப்பது ஏர்வாடியில் என்றால் சரிதான். சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் குடும்பம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் ஓரளவு தெரியும். எந்த வருடத்தில் இருந்து எனக்கு பழக்கம் என்றால் 2016 ம் ஆண்டில் இருந்து பழக்கம். 1, 2, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைக்கு வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்தது நான் தான். எதிர்வழக்குரையில் 1, 2 பிரதிவாதிகள் கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்றால் சரிதான். எனக்கு முன்பாக இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டிருக்கிறார் என்றால் சரிதான். அவர் சாட்சி விசாரணையில் என்ன பதில் சொல்லியிருக்கிறார் என்ற விவரம் எனக்குத் தெரியும். 3 ம் பிரதிவாதி என் சார்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி தாக்கல் செய்த அதே நிரூபண வாக்குமூலத்தை தான் நானும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி சாட்சியத்தில் ஏற்பட்ட

குறைகளை நிவர்த்தி செய்வதற்காகத் தான் நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றும், அதனால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 2013ம் ஆண்டில் வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் குடும்பத்தில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது. வாதியின் தாயார் நூர்ஜஹான் ரத்து செய்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் வாதி சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் 2 பேர் போட்டிருப்பதாக சொன்னார்கள். யார் போட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் முகம்மதியர் சட்டத்தில் வாதியின் தாயார் நூர்ஜஹான் செட்டில்மெண்ட் பத்திரம் பிறப்பிக்கமுடியாது என்று சொல்லியுள்ளது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் வழக்கறிஞர் சொல்லி தெரியும். நூர்ஜஹான் செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்த விவரம் வாதிக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தாயார் தெரிவித்துள்ளார் என்ற விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் தாயார் நூர்ஜஹான் சொல்லி எனக்குத் தெரியும். வாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் பிறப்பித்த விவரம் நேரடியாகத் தெரியாது என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதியின் தாயார் நூர்ஜஹான் சென்னையில் இருதய நோய்க்கு சிகிச்சை எடுத்தார் என்றால் இல்லை. மதுரையில் தான் எடுத்தார். 1ம் பிரதிவாதிக்கு அவரது தாயார் செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்த பிறகு எந்த ஒரு சொத்தும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ரத்து செய்த பிறகு வாதியின் தாயார் நூர்ஜஹான் பிறப்பித்த செட்டில்மெண்ட் ஆவணங்களின் அசல் 1 முதல் 3 பிரதிவாதிகளின் வசம் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். வாதி

பெயருக்கு 2 வதாக செட்டில்மெண்ட் எழுதியதைப் பொறுத்து அவருக்குத் தெரிய வாய்ப்பில்லை என்றால் சொல்லியிருப்பதாக சொன்னார்கள். 2ம் தபசில் சொத்தில் இருந்து நான் வாடகையாக மாதம் ரூ.22,000/- பெற்று வருகிறேன். அதில் உள்ள திருமண மண்டபம் பூட்டப்பட்டுள்ளது. வாடகை தொகையில் வாதிக்கு ஒரு பாகத்தைக் கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி குடும்பத்தை பற்றியோ, அவரது தாயாரைப் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது என்றும், அதனால் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் பிறப்பிக்கும்போது வாதியின் தாயாருக்கு என்ன வயதிருக்கும் என்றால் அவர் ரொம்ப வயதானவர் தான். ஆனால் என்ன வயது என்று எனக்கு சரியாக தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு அந்த சமயத்தில் நிறைய கடன்கள் இருந்தது என்றால் அவ்வாறு அவர் சொன்னார். 1ம் பிரதிவாதி தான் அவரது தாயாரை ஏமாற்றி செட்டில்மெண்ட் ரத்து செய்ய வைத்திருக்கிறார் என்றும், என் பெயரிலும் கிரயம் செய்ய வைத்திருக்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கிரயத் தொகையை நூர்ஜஹானுக்கு மட்டும் தான் கொடுத்தேன். செட்டில்மெண்ட் பத்திரம் பிறப்பித்த பிறகு அதனை ரத்து செய்ய நூர்ஜஹானுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும், அதனால் அதன் பிறகு பிறப்பிக்கப்பட்ட செட்டில்மெண்ட் மற்றும் கிரய பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிக்கு 4ல் 1 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Uploaded on 10.10.2025